## இயல் - 3

## அற இலக்கியங்களில் பெண்களின் நிலை

மனித வாழ்க்கையில் பின்பற்றப்பட வேண்டிய நிலையான அறங்களை அற இலக்கியங்கள் வெளிப்படையாக அமைத்து வலியுறுத்துகின்றன. அறநூல்கள் மனித இனம் மொத்தத்திற்கும் உரியனவாகக் கூறும் பொதுவான நீதிகள் பற்றிப் பலவாறு எடுத்துரைக்கின்றன. இவற்றிலிருந்து வேறுபட்ட சில தனிநீதிகளைப் பெண்ணினத்திற்கு உரியனவாக, அற இலக்கியங்கள் எடுத்து இயம்புகின்றன. அற இலக்கியங்களில் பெண்களின் நிலை பற்றி ஆராயப்படுகின்றது.

தொல்காப்பியர் மனித குலத்திற்குப் பொதுவான இலக்கணம் வகுக்காமல் ஆணுக்கும், பெண்ணுக்கும் எனத் தனித்தனி இலக்கணம் வகுத்துள்ளார்.

"பெருமையும் உரனும் ஆடூஉ மேன"[1]

என்றும்,

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப"[2]

என்றும் கூறுவதிலிருந்து பெருமையும், வலிமையும் ஆணுக்குரிய பண்புகளாகவும், அச்சம், மடம், நாணம் ஆகியன பெண்ணுக்கு இருக்க வேண்டிய குணங்களாகும் என்கிறார். மனித இனம் முழுவதற்கும்,

"பேதைமை அகற்று"[3]

என்று அறிவுரைத்த ஔவையார் தான்,

"பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம்"[4]

என்று பெண்களுக்குத் தனியாக ஒரு விதியைச் செய்துள்ளார். முட்டாள் தனமாக நடந்து கொள்ளக்கூடாது என்று மனித இனம் முழுவதற்கும் அறிவுரை கூறிவிட்டு, அறியாதவர் போல் அடக்கமாயிருப்பது பெண்களுக்கு ஆபரணத்தைப் போன்ற குணமாகும் என்று உரைக்கின்றார்.

**பெண்ணின் சிறப்பு**

ஆணும், பெண்ணும் மனித சமுதாயத்தின் இரு சமபகுதிகள். சமுதாயத்தின் அடிப்படை அமைப்பான குடும்பத்தை அமைக்கவும், உருவாக்கவும் இருபெரும் சக்திகளாக ஆணும் பெண்ணும் உள்ளனர். அற இலக்கியங்களில் 'பெண்' என்பது மனைவிக்குரிய சிறப்புப் பெயராகக் குறிக்கப்பட்டுள்ளது. இதனை வள்ளுவர்,

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொல்காத்துச் சோர்விலாள் பெண்"[5]

என்கின்றார். கற்பு நெறியில் தன்னையும் காத்துக்கொண்டு, தன் கணவனையும் பாதுகாத்துக்கொண்டு,தகுதியமைந்த புகழையும் காத்து, உறுதி தளராமல் வாழ்கின்றவளே பெண் என்கிறார். சிறந்த மனைவி என்ற பொருளிலேயே பெண் என்ற பெயரைக் குறிப்பிடுகிறார். பெண்கள் வீடுபேறு அடைய வேண்டுமென்றால் அதற்கு,

"பெற்றால் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு"[6]

என்று வள்ளுவர் வலியுறுத்துகின்றார். மனைவியானவள் கணவனைப் போற்றிக் கடமையைச் செய்தால் சிறப்பை உடைய மேலுலக வாழ்வைப் பெறமுடியும் என்கிறார். பெண்ணுக்கு இருக்க வேண்டிய பண்புகளாக,

“கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்
உட்குடையாள் ஊர்நாண் இயல்பினாள் - உட்கி
இடனறிந் தூடி இனிதின் உணரும்
மடமொழி மாதராள் பெண்”[7]

என்று நாலடியார் பாடல் குறிப்பிடுகிறது. அழகுள்ளவளாகவும், தன் கணவன் விரும்புகின்ற வகையிலே தன்னை அலங்காரம் செய்து கொள்பவளாகவும் இருக்க வேண்டும் எனவும், தீய காரியங்களைச் செய்வதில் அச்சமும், ஊரார் பழிப்புக்கு நாணம் அடையும் தன்மையும் உடையவளாக இருக்க வேண்டும் என்றும் இத்தனையும் உடையவள்தான் பெண் என்று உரைக்கின்றது. இக்கருத்தைப் போன்றே அறநெறிச்சாரமும்,

“கொண்டான் குறிப்பொழுகல் கூறிய நாணுடைமை
கண்டது கண்டு விழையாமை – விண்டு
வெறுப்பன செய்யாமை வெ∴காமை நீக்கி
உறுப்போ டுணர்வுடையாள் பெண்”[8]

எனக் குறிப்பிடுகிறது. கணவன் குறிப்பறிந்து நடக்க வேண்டும், நாணம் உடையவளாக இருக்க வேண்டும், எப்பொருளையும் கண்டவுடன் மனம் சென்றவழிப் பெற விரும்பாமல் இருக்க வேண்டும். கணவனுடன் மாறுபட்டு வெறுப்பான செயல்களைச் செய்யாமல் இருக்க வேண்டும். இத்தனையும் பொருந்தியவள்தான் ‘பெண்’ என்று குறிக்கப்படுவாள் என்கிறது. பெண் என்பவள்

இல்லறத்தை ஏற்ற பின்புதான் சிறப்படைய முடியும் என்பதைப் புலப்படுத்துகின்றது. இதனைப் போன்றே,

“மடப்பதூஉம் மக்கட் பெறுவதூஉம் பெண்பால்
முடிப்பதூஉம் எல்லாருஞ் செய்வர் - படைத்ததனால்
இட்டுண்டில் வாழ்க்கை புரிந்துதாம் நல்லறத்தே
நிற்பாரே பெண்டிரென் பார்.”[9]

எனும் அறநெறிச்சாரப் பாடல் அமைந்துள்ளது. இளமைப் பருவமான மங்கைப் பருவத்தை அடைதலும், புதல்வர்களைப் பெறுதலும், பெண்களுக்குரிய அணிகலன்களை அணிந்து கொள்ளுதலுமாகிய இவற்றை எல்லா மகளிருஞ் செய்வர். ஆனால் பெற்றப் பொருளைக் கொண்டு அதில் சிறிது அறஞ்செய்து, தாமும் உண்டு, நல்வாழ்க்கை மேற்கொண்டு கற்பு நெறியில் வழுவாமல் நிற்பவர்களே பெண்கள் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவார்கள் என்னும் கருத்தை வெளிப்படுத்துகிறது. இரக்கம் முதலான இயல்புகளை உடையவளே பெண்ணெனப்படுவாள். இக்குணங்கள் இல்லாதவள் பெண்ணுருவம் உடையவளாக இருந்தாலும் பெண்ணெனப்பட மாட்டாள் என்பதனை நீதிவெண்பா,

“அன்னை தயையும் அடியாள் பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவிப்பொறையும் - வன்னுமுலை
வேசி துயிலும் விறன்மந் திரிமதியும்
பேசி லிவையுடையாள் பெண்”[10]

எனும் பாடல் மூலமும், திருக்குறளில்,

“அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை”[11]

எனும் பாடல் மூலமும் உணர்த்தப்படுகின்றது. தாயைப் போன்ற அன்பும், வேலைக்காரியைப் போன்ற தொண்டு உள்ளமும், திருமகளைப் போன்ற அழகும், நிலத்தைப்போன்றப் பொறுமையும் உடையவளேப் பெண் எனப்படுவாள் என்கிறது. அன்பு, தியாகம், தொண்டு, பொறுமை, அறிவு, அழகு ஆகியவை எல்லாம் அமையப்பெற்றவளே பெண் ஆவாள் என்பதை எடுத்துரைக்கின்றது.

**மனைவியின் கடமைகள்**

திருமணம் செய்து கொண்டுவிட்டால் மட்டுமே மனைவி என்ற சிறப்பை அடைந்துவிட முடியாது என்கின்றன அறநூல்கள். மனைவியின் கடமைகளாக திரிகடுகத்தில்,

"நல்விருந் தோம்பலின் நட்டாளாம் வைகலும்
இல்புறஞ் செய்தலின் ஈன்றதாய் - தொல்குடியின்
மக்கள் பெறலின் மனைக்கிழத்தி இம்மூன்றும்
கற்புடையாள் பூண்ட கடன்"[12]

என நல்லாதனார் குறிப்பிடுகின்றார். விருந்தினரைப் பாதுகாப்பதனால் கணவனுக்கு நட்பு உடையவளாம், இல்லறத்தை வழுவாது நடத்தலால் பெற்ற தாயாவாள், குடும்பம் விளங்குவதற்குரிய மக்களைப் பெறுவதனால் மனைவியாம் இம்மூன்றும் கற்புள்ள மனைவியின் கடமையாகும் என்கிறார். இக்கருத்தைப் போன்றே சிறுபஞ்சமூலத்தில் காரியாசான்,

"வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்ந்துவிருந் தோம்பித் - திருவாக்குந்
தெய்வதையும் எஞ்ஞான்றும் தேற்ற வழிபாடு
செய்வதே பெண்டிர் சிறப்பு"[13]

என்கிறார். தம் கணவரது வருவாயின் அளவை அறிதல், அதற்குத் தக்கவாறு செலவு செய்தல், சுற்றத்தினர் விரும்பும்படி விருந்தோம்பல், செல்வத்தைத் தருகின்றத் தெய்வத்தை வழிபாடு செய்தல் ஆகியவை பெண்களுக்குச் சிறப்பினைத் தருவதாகும். குடும்பத்தை நடத்தும் பொறுப்பு முழுவதும் பெண்களைச் சேர்ந்தது என்றக் கருத்தையே இவர் வலியுறுத்துகின்றார். வறுமையின் கொடுமையை வெளியில் காட்டிக் கொள்ளாமல் வாழும் பெண்ணைப் பற்றி நாலடியார்,

“கடகஞ் செறிந்ததங் கைகளால் வாங்கி
அடகு பறித்துக்கொண் டட்டுக் - குடைகலனா
உப்பிலி வெந்ததின் றுள்ளற்று வாழ்பவே
துப்புரவு சென்றுலந்தக் கால்”[14]

எனச் சிறப்பிக்கிறது. வீட்டின் வறுமை வெளியில் தெரியும் நிலை ஏற்படுமானால் அது நல்ல மனைவி என்ற சிறப்பை அழித்து விடும். வறுமையிலும் கடமையைச் செய்பவளாக வாழ்பவளே நல்ல மனைவி என்று போதிக்கின்றது. கற்பு என்னும் உறுதிநிலை கொண்டப் பெண் பெருமை அடைவாள் என்பதனை வள்ளுவர்,

“பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்”[15]

எனக் கூறுகின்றார். இல்வாழ்க்கையில் கற்பு என்னும் உறுதிநிலை இருக்கப் பெற்றால் பெண்ணைவிடப் பெருமை உடையது வேறு எதுவும் இல்லை என்கிறார். கணவன் குறிப்பறிந்து நடப்பவளே மனைவி ஆவாள். இதையே அதிவீரராமபாண்டியர்,

“கொண்டோர் எல்லாம் பெண்டிரும் அல்லர்”[16]

என்று கூறியுள்ளார். கணவனைப் பேணுவது மட்டுமே நல்ல மனைவிக்கு அழகாகும். வரவுக்குத் தகுந்த செலவு செய்து, விருந்தோம்பும் பண்போடு அமையும் நல்ல குணமும் செயலும் உள்ளவளே நல்ல மனைவியாவாள் என்பதை உணர்த்துகின்றார். நல்ல மனைவி என்று சிறப்பிக்கப்பட வேண்டுமானால்,

“கற்புடுத் தன்பு முடித்துநாண் மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு – மக்கட்பே
றென்பதோ ராக்கமும் உண்டாயின் இல்லன்றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு”[17]

என்று நீதிநெறிவிளக்கம் எடுத்துரைக்கின்றது. கற்பை ஆடையாகவும், அன்பை மலராகவும், நாணத்தைச் சந்தனமாகவும், நற்குண நற்செயல்களை ஆபரணங்களாகவும் அணிந்திருக்க வேண்டும் என்கிறது. கணவனது குறிப்பை உணர்ந்து நடத்தல், அவனது வரவுக்குத் தக்க செலவு செய்தல், அவனது சிறப்பைக் காப்பாற்ற விருந்தோம்புதல், வறுமையிலும் இன்முகத்தோடு வீட்டுத் துன்பம் வெளியே காட்டாமல் வாழ்தல், கற்பும், அன்பும், நாணமும் தாங்கியவளாக இருத்தல் ஆகியவையே நல்ல மனைவி என்று சிறப்பாகச் சொல்வதற்குரிய தகுதிகளாகும் என்பதை அறியமுடிகின்றது.

கணவன் வாழ்வுக்காகத் தன் உணர்வுகளை அழித்துக்கொண்டு வாழாத பெண், நல்ல மனைவியாக மாட்டாள் என்று மட்டும் கூறாமல் அவர்களைக் கூற்றம் என்றே குறிக்கும் நிலை அறஇலக்கியங்களில் காணப்படுகிறது. அன்பும், அறிவும், நற்பண்பும், திறமையும் உள்ள பெண்களால்தான் குடும்பங்கள் சிறப்படையும்.

அப்பண்புகள் இல்லாத பெண் வாழும் அக்குடும்பம் பாழாகும் என்பதனை நாலடியார்,

“மழைதிளைக்கு மாடமாய் மாண்பமைந்த காப்பாய்
இழைவிளக்கு நின்றிமைப்பின் என்னாம் - விழைதக்க
மாண்ட மனையாளை யில்லாதான் இல்லகம்
காண்டற் கரியதோர் காடு”[18]

என எடுத்துரைக்கின்றது. சிறந்த குணங்கள் அமைந்த மனையாளைப் பெறாதவனுடைய வீடு பார்ப்பதற்குப் பயங்கரமான ஒரு காடாகும். நல்ல மனைவி இல்லாத வீடு வீடன்று என்கிறது. இதனால் இல்வாழ்வு இனிது நடைபெற வேண்டுமானால் பெண்கள் நற்பண்புகள் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என கூறுகின்றது. இதே போன்று புறநானூறில்,

“மனைக்குவிளக் காகிய வாணுதல் கணவன்”[19]

என்று விளக்கப்பட்டுள்ளது. மனைக்கு விளக்காகியப் பெண்ணின் கணவன் என்று விளக்குகின்றது.கணவனுக்காக வாழாது, கணவனைக் குறைசொல்லி வாழ்பவர்கள் மட்டுமல்ல, கணவன் பேச்சுக்கு மறு பேச்சு பேசுபவர்களும் கூற்றமாகவே பழிக்கப்பட்டுள்ளனர். இதனை,

“எறியென் றெதிர்நிற்பாள் கூற்றம் - சிறுகாலை
அட்டில் புகாதாள் அரும்பிணி – அட்டதனை
உண்டி யுதவாதாள் இல்வாழ்பேய் - இம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை”[20]

என்று நாலடியார் எடுத்துரைக்கின்றது. கணவன் அடித்தால் அடி என்று சொல்லிக் கொண்டு எதிர்த்து நிற்பவள் எமனாகவும், விடியற்காலையில் சமையல் கட்டில் புகுந்து உணவு சமைக்காத மனைவி கொடிய நோயாகவும், சமைத்த உணவை உரிய நேரத்தில் கொடுத்து உதவாதவள் பேயாகவும் பழிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மூவரும் கணவனைக் கொள்ளும் ஆயுதம் ஆவார்கள் என்று உரைக்கின்றது. இதே போன்று திருக்குறளில்,

"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித்து ஆயினும் இல்"[21]

என வள்ளுவர் உரைக்கின்றார். இல்வாழ்க்கைக்குத் தகுந்த நற்பண்பு மனைவியிடம் இருந்தால் மட்டுமே வாழ்க்கை சிறப்படையும் என்கிறார். கணவன் வாழ்வுக்காக மட்டுமே வாழாதப் பெண் கூற்றமாகிறாள். இதனை,

"கூற்றமே இல்லிற்கு இசைந்து ஒழுகாப் பெண்"[22]

என்று ஔவையார் கூறுகின்றார். மனைவியானவள் வீட்டில் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்கின்றார். அதோடு,

"தூற்றும் பெண்டிர் கூற்று எனத் தகும்"[23]

என ஔவையார் உரைக்கின்றார். கணவன் செய்யும் தவறுக்காகக்கூட அவனைக் குறை சொல்வதைப் பெண்ணுக்கு மறுத்துள்ளார். பெண்ணாகிய ஔவையாரே பெண்ணுக்கு எதிராகப் பேசுவதை அறியமுடிகிறது. கணவன் நலனுக்காக வாழாத பெண்கள் கூற்றமாவர். கணவன் வாழ்வில் ஏற்படும் எந்த இடையூறும் பெண்ணால் நிகழ்வதாகவே பேசப்பட்டுள்ளது. அழகும், அலங்காரமும், சிரிப்பும் தவறாகக்

கருதப்பட்டு இவற்றை உடையப் பெண் 'கூற்றம்' எனத் தவறாகக் கூறப்பட்டுள்ளாள். முடியாத நிலையிலும் கணவனை உண்டி முதலியவற்றால் உபசரிப்பதைப் பெருங்கடமையாகப் பெண்ணுக்கு இந்தச் சமுதாயம் வலியுறுத்துவதற்குக் காரணமாக அற இலக்கியங்கள் அமைந்துள்ளன.

தர்ம நெறியில் மனைவி மக்களோடு கூடி வாழும் இல்வாழ்வைவிட துறவறம் சிறந்ததல்ல என்று திருக்குறள் கருதியுள்ளது. திருக்குறளைத் தவிர பிற அறநூல்களில் தவமே தலையாயது என்றக் கருத்தைக் காணமுடிகிறது. நிலையாமையைக் காட்டிப் பெண் ஆசையை ஒதுக்கும்படி அறநூல்கள் ஆண்களுக்கு அறிவுரை உரைத்துள்ளன. இதனை,

"தலையே தவமுயன்று வாழ்தல் ஒருவர்க்
கிடையே இனியார்கட் டங்கல் - கடையே
புணராதென் றெண்ணிப் பொருள்நசையால் தம்மை
உணரார்பின் சென்று நிலை"[24]

என்று நாலடியார் பாடல் உணர்த்துகின்றது. தவ வாழ்வே முதன்மை பெறும் வாழ்வு என்று கூறுகிறது. நல்ல மனைவியுடன் வாழும் வாழ்க்கையானது இரண்டாம் நிலையையே பெறும் என்பதை வலியுறுத்துகின்றது. தவத்தை வலியுறுத்துவது தவறில்லை. ஆனால் பெண்களைத் தாழ்த்தும் நோக்கில் பூதஞ்சேந்தனார்,

"தடமென் பணைத்தோள் தளிரிய லாரை
விடமென் றுணர்தல் இனிது"[25]

எனும் இனியவைநாற்பதுப் பாடலில் விளக்குகின்றார். தவமென்ற பெயரில் பெண்களைத் தாழ்த்தும் நோக்கில் நஞ்சாக வருணிப்பது கண்டிக்கத்தக்கதாகும். இதே போன்று நீதிவெண்பாப் பாடல்,

"ஊரு ரெனும்வனத்தே யொள்வாட்கண் மாதரெனுங்
கூரூர் விடமுட் குழாமுண்டே — சீரூர்

விரத்திவை ராக்கியவி வேகத் தொடுதோல்
உரத்தணியத் தையாவென் றோது"[26]

என பெண்களை நச்சு என்று வருணித்திருப்பது பெண்களைப் பழிப்பதாக உள்ளது. ஆணுக்குத் தவவாழ்வு தலையாயது, தவ வாழ்வைக் குலைக்கும் சக்தி பெண்ணுக்கு உண்டு என்று கூறக்கருதி பெண்ணை நச்சுமுள், நஞ்சு என்றெல்லாம் பழித்துக் கூறியிருப்பதை அறியமுடிகிறது.

பெண்களைப் பற்றிக் கூறுகையில் பெண்ணை உயர்த்தியும், துறவு வாழ்க்கை என்னும் பொழுது பெண்களை தாழ்த்துவதும் என அறநூல்கள் எடுத்துக்கூறுவது சிந்தித்தற்குரியது. இல்வாழ்வுக்கு நல்ல மனைவிக்கான இலக்கணங்களைச் சொல்லி இத்தகையவர்கள் மட்டுமே பெண்கள் என்றனர். துறவு வாழ்க்கை என்ற போது பெண்ணை நஞ்சு, முள் என்று தாழ்வுபடுத்தி உள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

## பெண்ணுரிமை மறுக்கப்பட்ட நிலை

அறநூல்கள் பெண்களின் அன்றாட வாழ்வுக்கு ஆயிரம் விதிகள் வகுத்துக் கொடுத்துள்ளது. உண்ணவும், உணரவும், பேசவும் தனித்தனி விதி சொல்லி பெண்ணைத் தனிமைப்படுத்தி உள்ளன. பெண்களிடம் மறைபொருள்களைச் சொல்லக்கூடாது என்பதனைக் கணிமேதாவியார்,

“கண்போல்வார்க் காயாமை கற்றார் இனஞ்சேர்தல்
பண்போல் கிளவியார்ப் பற்றாமை – பண்போலும்
சொல்லார்க்கு அருமறைசே ராமை சிறிதெனினும்
இல்லார்க்கு இடர்தீர்த்தல் நன்று”[27]

என்று ஏலாதிப் பாடலின் மூலம் உணர்த்துகின்றார். பெண்களிடம் அன்பு கொள்ளாமையும், அவர்களிடம் மறைபொருளைச் சொல்லாமல் இருப்பதும் சிறப்பைத் தரும் எனக் கூறுகின்றார். அற இலக்கியங்களில் பெண்களின் பேச்சுக்குத் தடை செய்யும் விதி வகுக்கப்பட்டிருந்தது. எத்தனைதான் சமுதாய மாற்றங்கள் ஏற்பட்டாலும் பெண்ணைப் பொறுத்தவரையில் அவள் மரபை மீறிவிட்டதாகவே கூறுகின்றனர். இதனை,

“பெண்ணொருத்தி பேசிற் பெரும்பூமி தானதிரும்
பெண்ணிருவர் பேசில்விழும் வான்மீன்கள் - பெண்மூவர்
பேசி லலைசுவறும் பேதையே பெண்பலர்தாம்
பேசிலுல கென்னாமோ பின்”[28]

என நீதிவெண்பா உரைக்கின்றது. ஒரு தீயப் பெண் பேசினால் இப்பெரிய உலகம் அதிரும், இருவர் பேசினால் நட்சத்திரங்கள் உதிரும், மூன்று பெண்கள் பேசினால்

கடல் வற்றிப் போகும். பல பெண்கள் பேசினால் இவ்வுலகம் என்னதான் ஆகுமோ? என்கின்றது. பெண்கள் அதிகமாகப் பேசுவது தவறு என்று விளக்குகின்றது. பெண்கள் பேசக்கூடாது என்பதோடு மட்டும் நிற்கவில்லை. பெண்களின் பேச்சைக் கேட்காதீர்கள் என்பதை,

"தையல் சொல் கேளேல்"[29]

என்று ஔவையார் உரைக்கின்றார். பெண்கள் பேச்சைக் கேட்பது கூடாது என்கின்றார். அவர்களின் பேச்சைக் கேட்டு அதன்படி நடக்கக்கூடாது என எடுத்துரைக்கிறார். கணவனை எதிர்த்துப் பேசுவதை வெற்றிவேற்கை மறைமுகமாகக் கண்டிக்கிறது. இதனை,

"பெண்டிர்க்கு அழகு எதிர் பேசாது இருத்தல்"[30]

என எடுத்துரைக்கின்றது. பெண்களுக்கு அழகு எதிர்த்து பேசாமல் இருப்பதாகும் என்கிறது. கணவனுக்காக வாழ்ந்து கணவன் மகிழ்ச்சியில் சுகம் காண்பதற்காகவே பெண் என்று அறநூல்கள் கூறுகின்றன. அவற்றுள் உணவைக் குறைத்தலும் ஒன்று. இதனை,

"உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு"[31]

என்று ஔவையார் எடுத்துரைக்கின்றார். ஆணைவிட பெண்ணானவள் உடல் வலிமையும், மனவலிமையும் மிகுந்தவள். ஆனால் இங்கு ஔவையார் கூறும் கருத்து சற்று சிந்திக்க வேண்டியதாக உள்ளது. அதாவது உணவைக் குறைத்துக் கொண்டாள் உடல் வலிமை குறைந்துவிடும். ஆகவே இக்கருத்து

ஏற்புடையதா என்பது சிந்தித்தற்குரிய ஒன்றாகும். நீதி கேட்டுப் பெண்கள் நீதிமன்றம் ஏறுவதை திரிகடுகத்தில் நல்லாதனார்,

"பெண்டிர் தொடுத்தாண்டு அவைப்போர் புகலும்"[32]

என்று கண்டிக்கிறார். பெண்கள் வழக்குத் தொடுத்து நீதிமன்றம் செல்வதை இழிவாகக் கருதுகின்றார். பெண்கள் நீதிமன்றங்கள் நாடாமைக்குக் காரணம் சமுதாயக் கட்டுப்பாடுகளும், நீதிகளும் ஆகும். ஆண் எது செய்தாலும் ஏன் என்று கேட்காமல் அடங்கியிருப்பது பெண்ணுக்கு அழகு என்று கூறுகின்றனர். ஆணுக்கு விட்டுக் கொடுப்பதைப் பற்றி அறிவுரை கூறாத அறநூல்கள் பெண் அடங்கி நடக்காமல் இருப்பது துன்பமானது என்று கூறுகின்றன.

படிப்பில்லாதவன் அவையிற் பேசும் பேச்சும், இசையறிவு இல்லாதவன் கேட்கும் பாட்டும் பயனற்றவை. அது போலவே குருடனின் மனைவி அழகுடையவளாக இருப்பதும் பயனற்றது என்பதனை நல்லாதனார்,

"குருடன் மனையாள் அழகும் இருள்தீரக்
கற்றறி வில்லான் கதழ்ந்துரையும் - பற்றிய
பண்ணின் தெரியாதான் யாழ்கேட்பும் இம்மூன்றும்
எண்ணின் தெரியாப் பொருள்"[33]

எனும் திரிகடுகப் பாடலின் மூலம் உணர்த்துகின்றார். கணவன் கண்டு மகிழும்போதுதான் பெண்ணின் அழகுக்கு அர்த்தம் உண்டு என்கிறார். பெண்ணின் இயற்கை அழகு அவளுடைய சொந்த உடைமை அதையும் கணவனோடு இணைத்து பெண்ணுக்கு என்றுத் தனி உரிமை உடையதாக எதுவுமே இருக்கக்

கூடாது என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளதை அறியமுடிகிறது. அலங்காரம் செய்து கொள்ளத் தெரியாதவளே குடும்பப் பெண். இதனை,

"கோடேந் தகலல்குற் பெண்டிர்தம் பெண்ணீமை
சேடியர் போலச் செயல்தேற்றார் - கூடிப்
புதுப்பெருக்கம் போலத்தம் பெண்ணீமை காட்டி
மதித்திறப்பர் மற்றை யவர்"[34]

என நாலடியார் எடுத்துரைக்கின்றது. குடும்பப் பெண்கள் தனக்குத்தானே அலங்காரம் செய்து கொள்வதற்கு அறியமாட்டார்கள் என்கிறது. பெண்கள் அலங்காரம் செய்வதை இழிவாக உரைக்கின்றனர். தனக்குத் தானே அழகு செய்து கொள்பவர்கள் விலைமகளிர் என்றக் கருத்தை வெற்றிவேற்கை,

"விலைமகட்கு அழகு தன் மேனி மினுக்குதல்"[35]

எனும் பாடல் மூலம் விளக்குகின்றது. ஆடை அணிகலன்களாலும், மஞ்சள் முதலிய பூச்சுக்களாலும் அலங்காரம் செய்து கொள்ளும் பெண்கள் கற்பற்றவர்கள் என்கிறது. கணவனை இழந்த மங்கை எவ்வளவு தான் அழகு பொருந்தி இருந்தாலும் எந்தப் பயனும் இல்லை என்பதை,

"இன்னா இளமை வறுமை வந்து எய்தியக் கால்
இன்னா அளவில் இனியவும் - இன்னாத
நாள் அல்லா நாள் பூத்த நன் மலரும் போலுமே
ஆள் இல்லா மங்கைக்கு அழகு"[36]

எனும் மூதுரைப் பாடலில் ஔவையார் எடுத்துரைக்கின்றார். இளமைப் பருவம் இன்பமாக இருக்க வேண்டிய பருவம். அப்போது வறுமை வந்து வாட்டினால்

துன்பமே உண்டாகும். முதுமைப் பருவம் வாழ்வின் கடைசிக்காலம் அப்போது வேண்டிய செல்வங்கள் யாவும் குவிந்தாலும் இன்பம் அனுபவிக்க இயலாது. தேவையற்றபோது மலரை யார் சூடிக்கொள்வார்கள் அதைப் போன்றே கணவன் இல்லாத பெண்ணின் அழகு சிறப்பற்றதாகும் என்று ஔவையார் கூறுகின்றார். பெண்களின் அழகு கணவனுடன் வாழும் போதுதான் சிறப்படைகிறது என்பதை தெரிவிக்கின்றார். கணவன் ஊரில் இல்லாத போது அலங்காரம் செய்து கொள்ளக்கூடாது. இதனை,

"அயலூ ரவன்போக அம்மஞ்ச ளாடிக்
கயலேர்கண் ஆர எழுதிப் - புயலைம்பால்
வண்டோச்சி நின்றுலாம் வாளேர் தடங்கண்ணாள்
தண்டோச்சிப் பின்செல்லுங் கூற்று"[37]

என்று அறநெறிச்சாரம் சுட்டுகின்றது. கணவன் ஊரில் இல்லாத போது மஞ்சள் பூசி, மைதீட்டி, மலர் சூடி ஒப்பனை செய்யும் பெண் கற்பு நெறியில் வாழாதவர் என்னும் கருத்து குறிப்பாக உணர்த்தப்பட்டுள்ளது. அழகும், அலங்காரமும் பெண்ணுக்குரிய பண்பை அறிய உதவும் சோதனைகளாகவே கருதப்பட்டுள்ளன. கணவன் தன்னுடன் இல்லாத போது பெண்கள் அலங்காரங்கள் செய்து கொள்வது தவறு என்று அறநூல்கள் எடுத்துரைப்பதை அறியமுடிகிறது. மைதீட்டிய கண்களையுடைய விலைமகளிர் மனையைச் சேராமல் விலக வேண்டும் என்பதனை ஔவையார்,

"மை விழியார்தம் மனை அகன்று ஒழுகு"[38]

எனக் கூறியுள்ளார். விலை மகளிரை மைதீட்டுவதைச் சுட்டிச் சொல்லும் போது குலமகளிர் மைதீட்டுவது தவறாகும் என்பதை உணர்த்துகின்றார். பெண்கள் மலர் சூடிக் கொள்வதும் தவறாகும் என்பதை,

"கொண்டை மேல் பூத்தேடி முடிக்க வேண்டாம்"[39]

எனும் உலகநாதரின் பாடல் பிறர் காணும்படி பெண்கள் பூ சூடிக் கொள்வதைக் கண்டிக்கிறது. பிறர் காணும்படி கொண்டைமேல் பூ முடித்துக் கொண்டு திரியலாகாது. பூ சூடிக் கொள்ளுதல் பெண்களுக்குச் சிறப்பல்ல என்றக் கருத்தை உரைக்கின்றார். அழகும் அலங்காரமும் பெண்ணுக்கு உரிமையல்ல என்று கூறிய அறநூல்கள் மையும், மலரும் கூட கற்புடைமைக்கு ஏற்றவையல்ல என்று கருதியுள்ளதையும் அறியமுடிகிறது.

மைதீட்டுவதும் மலர் சூடுவதும் மங்கலமாகக் கருதும் மனநிலை இன்றும் மகளிரிடம் காணப்படுகிறது. மை கண்ணுக்குக் குளிர்ச்சி தருவது. அதனாலேயே பலர் சிறிய குழந்தைக்கும் மையிட்டு அழகு பார்க்கின்றனர். ஆனால் அறநூலார் மையையும், மலரையும் குறைவுபடுத்திப் பேசியிருப்பதைக் காண முடிகிறது. பெண்கள் மைதீட்டி, மலர்சூடக்கூடாது என்றத் தவறானக் கருத்தை அறநூல்கள் கூறுகின்றன என்பதை உணரமுடிகின்றது.

### பெண்ணுக்குச் சிறப்பு நாணம்

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நான்கும் பெண்மைக் குணங்கள் என்று இலக்கியங்கள் கூறுகின்றன. நாணத்தைப் பெண்ணுக்கு மிகவும் இன்றியமையாத பண்பாக அறநூல்கள் வலியுறுத்துகின்றன. நாணத்தைப் பற்றி தொல்காப்பியர்,

"உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்

செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந்த தன்றெனத்

தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு"[40]

என்று விளக்குகின்றார். உயிரினும் சிறந்தது நாணம். அதனினும் சிறந்தது கற்பு என இரண்டையும் உயர்வாகக் கூறுகின்றார். பெண்களுக்கு நாணம் முதலியப் பெண்மைப் பண்புகள் இருப்பின் அவர்களுக்கு மற்ற நலன்களும் சிறக்கும் என்பதனை நாலடியார்,

"உள்ளத் துணர்வுடையான் ஓதிய நூலற்றால்

வள்ளன்மை பூண்டான்கண் ஒண்பொருள் - தெள்ளிய

ஆண்மகன் கையில் அயில்வாள் அனைத்தரோ

நாணுடையாள் பெற்ற நலம்" [41]

எனக் கூறுகின்றது. நாணம் உடையவளே நல்ல பெண், நல்ல பெண் நல்ல மனைவியாவாள், நல்ல மனைவியின் அழகே சிறப்புடையதாகும். நாணத்தை அணிகலமாகக் கொண்டப் பெண் பெற்றிருக்கும் அழகு ஆண் தன்மை உடையவனுடைய கையிலுள்ள கூர்மையான வாட்படை போன்று சிறப்புடையதாகும் என்கிறது. நாணத்தைப் பற்றி திரிகடுகம்,

"கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டம் காமுற்ற

பெண்ணுக்கு அணிகலம் நாணுடைமை"[42]

எனும் பாடலின் வழி உணர்த்துகின்றது. நாணம்தான் பெண்ணுக்கு ஆபரணம் போன்றதாகும் என எடுத்துரைக்கின்றது. பெண்களுக்கு இயல்பாகவே நாணம் இருக்கும் என்பதனை வள்ளுவர்,

“கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்

நல்லவர் நாணுப் பிற”[43]

என எடுத்துரைக்கின்றார். தகாத செயலின் காரணமாக நாணம் அடைவதே நாணமாகும். பெண்களுக்கு இருக்கும் நாணம் இயல்பானதாகும் என்கிறார். பெண்கள் நாணம் இல்லாதவர்களாக இருப்பது மிகவும் துன்பமானது என்பதை கபிலர்,

“நலத்தகையார் நாணாமை இன்னா”[44]

என்று இன்னாநாற்பதுப் பாடலின்மூலம் எடுத்துரைக்கின்றார். அழகினை உடையப் பெண்கள் நாணமின்றி ஒழிகினால் அது அவர்களுக்கு துன்பத்தைத் தரும் என்று விளக்குகின்றார்.

## பெண்ணின் கற்பு நிலை

பெண்களுக்கு என்று எத்தனை நீதிகளைச் சொன்னாலும் அவை அத்தனைக்கும் ஒட்டு மொத்தக் காரணம் கற்பு. கற்பும், காவலும் பெண்கள் தமக்குத் தாமே போற்ற வேண்டிய நெறிகள் என்பது அறநூல்களின் போதனையாகும். கணவன் நலன் என்பது பெண்ணின் மூச்சாக அமைய வேண்டும் என்பதே கற்பைக் கற்பித்ததன் நோக்கமாக அமைகிறது. செல்வந்தர்கள் பற்றி அவர்களின் மனைவியின் கற்பைப் பற்றி நாலடியார்,

“யாமாயின் எம்மில்லங் காட்டுதும் தாமாயின்

காணவே கற்பழியும் என்பார்போல் - நாணிப்

புறங்கடை வைத்தீவர் சோறும் அதனால்

மறந்திடுக செல்வர் தொடர்பு"[45]

எனக் கூறுகின்றது. தன்னுடைய மனைவியைப் பிறர் பார்த்தாலே அவளுடைய கற்பு அழிந்து விடுவதாகச் செல்வந்தர்கள் நினைத்துக் கொண்டு விருந்தினரை வீட்டின் ஒரு ஓரத்தில் உட்கார வைத்து உணவு போடுவார்கள். அப்படிப்பட்ட செல்வந்தர்களின் தொடர்பை விட்டுவிடுக என்று எடுத்துரைக்கின்றது. இக்கருத்தைப் போன்றே,

"அரும்பெறற் கற்பின் அயிராணி யன்ன
பெரும்பெயர்ப் பெண்டி ரெனினும் - விரும்பிப்
பெறுநசையாற் பின்னிற்பா ரின்மையே பேணும்
நறுநுதலாள் நன்மைத் துணை"[46]

என நாலடியார் விளக்குகின்றது. சிறந்த கற்பினால் இந்திராணியைப் போன்ற புகழ்பெற்ற பெண்களாக இருந்தாலும், ஆசை கொண்டு ஆண்கள் தன் பின்னால் சுற்றுகின்ற தன்மை இல்லாமல் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும். இதுவே நல்ல வாழ்க்கைத் துணையாகும் என்று உரைக்கின்றது. பெண்களும், பொருளும், உணவும் காக்க வேண்டிய முறையில் காக்கப்படாமல் போனால் கெட்டுப்போகும் என்பது திரிகடுகத்தில் நல்லாதனாரின் கருத்து. இதனை,

"சில்சொல் பெருந்தோள் மகளிரும் பல்வகையும்
தாளினால் வந்த விழுநிதியும் - நாடோறும்
நாத்தளிர்ப்ப ஆக்கிய உண்டியும் இம்மூன்றும்
காப்பிகழல் ஆகாப் பொருள்"[47]

என்றப் பாடல் பெண்கள் காக்கப்பட வேண்டியவர்கள் என்பதைச் சுட்டுகிறது. பெண்கள் நிறை என்னும் பண்பால் தம்மைத் தாம் காக்கும் காப்பே சிறந்தது. அதனால் உன்னை நீயே காத்துக்கொள் என்ற வகையில்,

“சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை”[48]

என்ற வள்ளுவரின் குறள், மகளிர் மனத் திண்மையின் காரணமாகத் தம்மைத் தாம் காத்துக் கொள்வதே சிறப்புடையது என்று கூறுகிறது. மகளிருக்கு நிறைகாக்கும் காப்பே தலைசிறந்தது என்பதை,

“வழுக்கெனைத்து மில்லாத வாள்வாய்க் கிடந்தும்
இழுக்கினைத் தாம்பெறுவ ராயின் - இழுக்கெனைத்துஞ்
செய்குறாப் பாணி சிறிதேஅச் சின்மொழியார்
கையுறாப் பாணி பெரிது”[49]

என்று நாலடியார் பாடல் உணர்த்துகின்றது. தம் கற்பைத் தாமே காத்துக்கொள்ளாதப் பெண்களைக் காவலில் வைத்து அவர்கள் கற்பைக் காப்பாற்றிவிட முடியாது என்றக் கருத்தைக் கொண்டுள்ளது. கற்பு என்பதற்கு ஔவையார்,

“கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை”[50]

என்று கற்பை விளக்குகிறார். கணவன் சொல்லைத் தட்டாமல் நடப்பதே பெண்களுக்குக் கற்பு நெறியாகும் என்கிறார். இதே போன்று,

“காவல்தானே பாவையர்க்கு அழகு”[51]

என்று ஔவையார் எடுத்துரைக்கின்றார். பெண்களுக்குச் சிறப்பு எது என்றால் ஒழுக்கம் தவறாமல் தங்களைக் காத்துக்கொள்வது தான் என விளக்குகின்றார். பெண்களுக்கு அழகு என்பது,

"குலமகட்கு அழகு தன் கொழுநனைப் பேணுதல்"[52]

என்று அதிவீரராமபாண்டியன் வெற்றிவேற்கைப் பாடலில் உணர்த்துகின்றார். நற்குலப் பெண்ணுக்கு அழகு தன் கணவரைப் பாதுகாத்தல் எனக் கூறுகின்றார். கற்புடையவளை நெருப்பும் அழிக்காது என்பதனை,

"கயத்திடை உய்த்திடினும் கன்னனையா தென்றும்
பயற்றுக் கறிவேவா தற்றால் - இயற்றி
அறவுரை கேட்ட விடத்தும் அனையார்
திறவுரை தேறா தவர்"[53]

எனும் அறநெறிச்சாரப் பாடல் விளக்குகின்றது. பயறுகளுள் பத்தினிப் பயறாக இருப்பது எவ்வாறு வேகாமல் இருப்பது போல் கற்புடைய பெண்ணை நெருப்பாலும் அழிக்க முடியாது என்பதை அறிய முடிகிறது. கணவனை நீங்கி வாழ்வது, அயலார் வீடு செல்வது, தீயப் பெண்களுடன் சேருவது, நகையணிந்து வேற்றூர் செல்வது, தனியே திருவிழாக்களுக்குச் செல்வது, கணவன் கட்டளையின்றி விரதம் மேற்கொள்வது ஆகியவை எல்லாம் பழிப்புக்குரிய செயலாகும். இதனை அறநெறிச்சாரம்,

"தலைமகனில் தீர்ந்துறைதல் தான்பிறரில் சேர்தல்
நிலைமையில் தீப்பெண்டிர்ச் சேர்தல் - கலனணிந்து
வேற்றூர்ப் புகுதல் விழாக்காண்டல் நோன்பிடுதல்
கோற்றொடியாள் கோளழியு மாறு"[54]

எனும் பாடல் மூலம் உணர்த்துகின்றது. இவைகள் அனைத்தும் பெண்களுடைய கற்பு அழிவதற்குரிய வழிகளாகும் எனக் கூறுகின்றது.

## கடவுள் வழிபாட்டில் பெண்ணுக்கு தனிநீதி

ஆண் - பெண் இருபாலருக்கும் உரியதாக இலக்கியங்கள் காட்டிய கடவுள் வழிபாட்டுக் கருத்து பின்னால் மாற்றம் பெறத் தொடங்கியுள்ளது. கற்புடையப் பெண்கள் கடவுளை வழிபடுவதைவிடக் கணவனை வழிபடுவதே சிறந்தது என்றக் கருத்தைத் திருக்குறளிலும், பின் வந்த இலக்கியங்களிலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்எனப் பெய்யும் மழை"[55]

என்பது பெண்களின் இறையுணர்வுக்கு வள்ளுவர் வகுத்துக் கொடுத்துள்ள நீதியாகும். வேறு தெய்வம் தொழாதவளாய்த் தன் கணவனையே தெய்வமாகக் கொண்டு தொழுது துயிலெழுகின்றவள் பெய் என்றால் மழை பெய்யும் என்கிறார். 'கற்பு' என்பது மழை பெய்விக்கும் ஆற்றல் பெற்றது. இத்தகைய ஆற்றல் கணவனைக் கடவுளாகக் கொண்டு வழிபடும் பெண்களுக்கே ஏற்படும் என்பதை எடுத்துரைக்கின்றார். கற்புடைய பெண்கள் 'பெய்' என்றால் மழை பெய்ய வேண்டும் என்றக் கருத்தைச் சங்க இலக்கியத்திலும் காணமுடிகிறது. இதனை,

"என் தோழி
அருமழை தரல்வேண்டில் தருகிற்கும் பெருமையளே"[56]

எனும் கலித்தொகைப் பாடல் விளக்குகின்றது. என் தோழியிடம் அரிய மழையைத் தருவிக்கும்படி கூறினால் அதைப் பெய்யும்படி செய்யும் ஆற்றலுடையவள் அவள்

என்று தலைவியைப் பற்றித் தோழி கூறுகின்றாள். மழை பெய்யச் செய்யும் மாண்புடையவளே பெண் என்றக் கருத்தை,

“கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்டன
செய்வகை செய்வான் தவசி கொடிதொரீஇ
நல்லவை செய்வான் அரசன் இவர் மூவர்
பெய்யெனப் பெய்யும் மழை”[57]

என்ற திரிகடுகப் பாடல் வலியுறுத்துகிறது. நல்லவை செய்யும் அரசனும், மேற்கொண்ட விரதங்களை முறைப்படி செய்யும் தவசியும், கணவனுடைய குறிப்பறிந்து நடக்கும் பெண்ணும் ‘பெய்’ என்று சொன்னால் மழை பெய்யும் என்ற கருத்து உணர்த்தப்படுகிறது. கடவுளை வழிபடுவது கற்புடையப் பெண்களுக்குப் பெருமை தரும் செயல் அல்ல என்பதனை காப்பியங்களும் வலியுறுத்துகின்றன.

“சோமகுண்டம் சூரிய குண்டம் துறைமூழ்கிக்
காமவேள் கோட்டந் தொழுதார் கணவரொடு
தாமின் புறுவ ருலகத்துத் தையலார்
போகஞ்செய் பூமியினும் போய்ப்பிறப்பர் யாமொருநாள்
ஆடுது மென்ற அணியிழைக்கவ் வாயிழையாள்
பீடன் றெனவிருந்த பின்னரே”[58]

என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. சோம குண்டம், சூரியகுண்டம் என்னும் பொய்கை துறைகளில் மூழ்கி, மன்மதன் கோயிலை அடைந்து அவனை வணங்கினால் மகளிர் இவ்வுலகத்தில் தம் கணவரோடு பிரியாதிருந்து இன்பமுறுவர். மறுமையிலும் போக பூமியிற் போய்ப் பிறந்து கணவரோடு பிரிவின்றி

இன்பம் நுகர்வர். அவற்றில் நாமும் ஒருநாள் ஆடலாம் என்று கூறிய தேவந்திக்கு கண்ணகி, அங்ஙனம் துறை மூழ்கித் தெய்வந் தொழுதல் எங்களுக்கு இயல்பன்று எனக் கூறுகின்றாள். இளங்கோவடிகள் கண்ணகியின் வாயாலேயே கணவன் வழிபாட்டை மறைமுகமாக வலியுறுத்தி உள்ளார். இக்கருத்தைப் போன்றே பட்டினப்பாலையில்,

"இருகாமத் திணையேரி" [59]

எனக் கூறப்பட்டுள்ளன. இம்மையிலும், மறுமையிலும் இன்பத்தைக் கொடுத்தற்குரிய இணைந்த ஏரிகள் என்கிறது. மணிமேகலையில் கணவனே கடவுள் என்றக் கொள்கை பல இடங்களில் பேசப்பட்டுள்ளது. கற்புடைய பெண்கள் பிறர் நெஞ்சு புகமாட்டார்கள் என்பதனை,

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றஅப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்
பிசியும் நொடியும் பிறர்வாய்க் கேட்டு
விசிபிணி முழவின் விழாக்கோள் விரும்பிக்
கடவுள் பேணல் கடவியை யாகலின்
மடவரல் ஏவ மழையும் பெய்யாது
நிறையுடைப் பெண்டிர் தம்மே போலப்
பிறர்நெஞ்சு சுடூஉம் பெற்றியு மில்லை
ஆங்கவை யொழிகுவை யாயி னாயிழை
ஓங்கிரு வானத்து மழையுநின் மொழியாது"[60]

எனும் மணிமேகலைக் காப்பியம் உணர்த்துகின்றது. கற்புடைய பெண்கள் கணவனைத் தவிரப் பிற கடவுள்களை வழிபடமாட்டார்கள். இதை உணராது இந்திர விழாவில் கலந்து கொண்டு நீ கடவுளை வழிபட்டது தவறு. அதனால் 'பெய்' என்று சொன்னால் மழையும் பெய்யாது என்று மருதியிடம் பூதசதுக்கம் உரைக்கின்றது. கற்புடைய மகளிர் கணவனையே கைதொழுது வாழ்வார் என்றக் கருத்தைத் திருத்தக்கதேவர்,

"சாமெனிற் சாத னோத றன்னவன் றணந்த காலைப்
பூமனும் புனைத லின்றிப் பொற்புடன் புலம்ப வைகிக் காமனை
யென்றுஞ் சொல்லார் கணவற்கை தொழுது வாழ்வார், தேமலர்த்
திருவோ டொப்பார் சேர்ந்தவன் செல்ல றீர்ப்பார்"[61]

என்று சீவகசிந்தாமணிக் காப்பியத்தில் உணர்த்துகின்றார். இது சீவகன் பவதத்தனிடம் கூறுவதாக அமைந்த கருத்தாகும்.

## பெண்ணியம்

இருபதாம் நூற்றாண்டில் மிக வேகமாக வளர்ந்து வரும் கோட்பாடு பெண்ணியக் கோட்பாடாகும். சக உயிரியாகக் கருதப்பட வேண்டிய பெண்ணினம் சமூகத்தில் மிகத்தாழ்ந்த நிலையில் கருதப்பட்டு போராட்டங்களும், சமூகப்பிரச்சினைகளும், சமூக மறுப்புக்களும் பெண்ணியச் சிந்தனைகள் தோன்றக் காரணமாயின. இருபத்தியோராம் நூற்றாண்டில் பெண்களைத் தலைநிமிர்ந்து வாழச் செய்த 'பெண்ணியம்', பெண் உலகில் பெருஞ்சாதனையாகத் திகழ்கிறது.

சமூகத்தில் மாற்றங்கள் தோன்றுவது வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் அடிப்படையான ஒன்றாகும்.

## பெண்ணியம் சொற்பொருள் விளக்கம்

பெண்ணியம் என்பது உலகளாவியது. இது உலகில் உள்ள அனைத்து மனித குலத்துள்ளும் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் பெண்களின் முன்னேற்றத்தை விமர்சிக்க ஏற்பட்டது. குறிப்பாகப் பெண்களின் சமத்துவத்தையும் முன்னேற்றத்தையும் வலியுறுத்துவதாகும்.

நச்சினார்க்கினியர் ‘‘பெண்ணியம் என்பது கண்களுக்குப் புலனாகக் கூடிய அமைதித் தன்மை” [62] என்கிறார். திரு.வி.க, “பெண்மை என்பது அடக்கம், பொறுமை, தியாகம், பாநலம், அழகு ஆகியன அமைந்த ஒன்று” [63] என பெண்ணின் இயல்பு பற்றிக் கூறுகின்றார்.

கி.பி.1889ஆம் ஆண்டிற்கு முன்பு வரை ‘உமனிசம்’ என்ற சொல் பெண் உரிமைச் சிந்தனைகளையும், அதன் அடிப்படையிலான போராட்டங்களையும் குறிப்பதற்குப் பயன்பட்டது. கி.பி.1890ஆம் ஆண்டிலிருந்து ‘உமனிசம்’ என்ற சொல்லிற்குப் பதிலாகப் ‘பெமினிசம்’(Feminism)என்ற சொல் பயன்பாட்டிற்கு வந்தது. ‘பெமினிசம்’ என்ற ஆங்கிலச் சொல் ‘பெமினா’ என்ற இலத்தீன் மூலச் சொல்லில் இருந்து தோன்றியது. கி.பி.1894ஆம் ஆண்டு வெளிவந்த ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியில் முதன் முதலில் இச்சொல் எடுத்தாளப்பட்டது. இவ்அகராதி பெண்ணியம் என்ற சொல்லுக்கு “பெண்களின் தேவைகளை நிறைவேற்ற அவர்கள்

சார்பாக வாதாடுவது போராடுவது"[64] என்றப் பொருளைத் தந்தது.பெண்ணியம் என்பதற்குப் பெண்ணியத் திறனாய்வாளர்கள் தரும் விளக்கங்களாவன.

1. "பாலியல் சமத்துவம்
2. பெண்சம உயிரி
3. ஆணுக்கு நிகரானவள்
4. எந்நிலையிலும் எக்காலத்திலும் அவள் அடக்கி வைக்கப்படக்கூடியவள் அல்ல.
5. பெண்கள் குடும்பங்களிலும் சரி, அலுவலகங்களிலும் சரி, சமூகப் பிரச்சினைகளிலும் சரி நசுக்கி, ஒடுக்கி வைக்கப்படுகின்றாள். அவ்வாறு ஒடுக்கப்படுவதையும், அதிலிருந்து மீள்வதையும் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
6. பெண்ணைத் தனிமைப்படுத்தி வைக்கக்கூடாது.
7. சார்பு நிலைப்படுத்தக் கூடாது.
8. பெண்களை அவர்களின் ஒட்டு மொத்த சமூகத்தை மீட்டெடுப்பது."[65]

பெமினிசம் என்ற சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லாக "பெண் விடுதலை இயக்கங்கள் பெண்நிலைவாதம்"[66] என்ற சொல்லைப் பயன்படுத்தி வருகின்றனர்.

பெமினிசம் என்ற சொல் "இலக்கிய உலகில் முதலில் பெண்ணின் பாலியல் பண்புகளைக் குறிக்கவும், பெண் உரிமைகளைப் பேசவும், பயன்படுத்தப்பட்டது"[67] என்கின்றனர். கார்டன் என்பவர் "பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அதை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகளே பெண்ணியம்" [68] என்று வரையறை செய்கின்றார்.

“சமூகம், பண்பாடு, அரசியல் மற்றும் தனிப்பட்ட சூழல் என்று எல்லா நிலைகளிலும் ஆண் மேலாதிக்கம் வேரூன்றியிருப்பதால் அவர்கள் படைத்த இலக்கியங்களும் அதற்கு விதி விலக்காக அமையவில்லை”[69] என்று எல்மான் குறிப்பிடுகின்றார்.‘Femina’ என்ற சொல்லுக்கு “பெண்ணின் குணாதிசயங்களைக் கொண்டுள்ளது என்பது பொருளாகும்”[70] எனக்கூறுகின்றனர்.

சார்லட் பன்ச் என்பவர் பெண்ணியம் என்பது “பெண்களின் எல்லாச் சிக்கலையும் புரிந்துகொண்டு அவற்றை நீக்க முயல்வதாகும். அதன்மூலம் உலகளவில் அரசியலிலும், பொருளாதாரத்திலும், ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும்”[71] என்கிறார். சார்லட் பன்ச் பெண்ணியம் என்பது “பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும் என்றும், பெண்ணியத்தை சமூக நிலை மாற்றக்கோட்பாடு”[72] என்றும் விளக்குகின்றார்.

தெரசா பிளிங்கடன் என்ற பெண்மணியும் “பெண்ணியம் உலகையே மாற்றியமைக்கும் இயக்கம்”[73] என்று கருத்துரைக்கின்றார். மனிதநேயன் “பெண்மாந்தர் விளைநிலம்,அந்நிலத்தின் தன்மைக்கேற்ற பயிரே அங்கு விளையும், தற்குறித்தாயின் வயிற்றிலே உருவாகி அவளாலே வளர்க்கப்படும் குழந்தை தற்குறியாகத்தான் இருக்கும்”[74] எனக் குறிப்பிடுகிறார்.

கதிர்மகாதேவன், பெண்ணியம் பற்றிக் கூறுகையில் “பெண்ணின் நிலை அதாவது உலகத்தோடு பெண் எத்தகைய தொடர்பு கொண்டிருக்கிறார். ஆணுக்கு

ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி என்ற நிலை நிலவுதல் முதலான பல செய்திகளை நன்கு அறிவது”[75] என்று விளக்கம் தருகின்றார்.

இருபத்தியோராம் நூற்றாண்டில், “பெண்களைத் தலை நிமிர்ந்து வாழச் செய்த பெண்ணியம் பெண் உலகில் பெருஞ்சாதனையாகத் திகழ்கிறது. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு என்றிருந்த நிலையை மாற்றி, மங்கையர் கல்வி கற்று வாழ்க்கையின் எல்லாத் தளங்களிலும், ஆடவருக்கு நிகராகச் செயல்பட்டு, முன்னேறி வருகின்ற சூழலுக்கு வித்திட்டது பெண்ணியம்”[76]ஆகும்.

‘Feminism’ என்ற சொல்லுக்கு நேர்தமிழ்ச் சொல்லாகப் “பெண் விடுதலை இயக்கங்கள் பெண் நிலைவாதம் என்ற சொல்லைப் பயன்படுத்தி வருகின்றனர். இச்சொல் சமூகவியல் நோக்கில் எடுத்தாளப்பட்ட சொல்லாகும். ‘பெண்நிலை வாதம்’ என்ற சொல் பெண்களை விவாத நோக்கில் பார்க்கிறது. பெண்ணியம் என்ற சொல் அவர்களை ஆய்வு நோக்கில் பார்க்கிறது”[77] என்கின்றனர்.

டோனா ஹாக்ஸ்ஸ்ட் மற்றும் மாரோ என்பவர்கள் “பெண்ணியம் என்பது தீவிர செயல்பாடுடையது, பெண்ணியம் தனிப்பட்ட முறையில் மட்டுமின்றி அரசியல் மற்றும் தத்துவநிலையாகவும் செயல்பட வேண்டி இருப்பதால் இதற்குத் தேவை தீவிர நடைமுறை செயல்பாடுதான். தீவிரம் இல்லாவிட்டால் பெண்ணியம் என்ற சொல் அர்த்தமற்றதாகித் தானே இல்லாமல் போய்விடும்”[78] என்று கருதுகின்றனர்.

எலிசபெத் கேடிஸ்டாண்டன் என்ற பெண் “1895 ஆம் ஆண்டு பெண்களின் வேதம் என்ற நூலில் பழைய மற்றும் புதிய கிறித்துவ வேத ஆகமத்தில் உள்ள சில பக்கங்களைத் தொகுத்து வெளியிட்டார்”[79] இது ஆன்மீகப் பெண்ணிய நோக்கில் எழுதப்பட்ட முதல் நூலாகும்.

தலைவன் என்றும் தொண்டன் என்றும் மனிதரைப் படிநிலைப்படுத்தாமல் எல்லோருக்கும் சமபங்கு செயல்பாடு என்று இயங்குவதே தலைமைத்துவம் வேண்டாப் பெண்ணியமாகும். “கிரேக்கச் சொல்லான, ‘anarchaos’ என்பதற்கு ஆட்சியாளர் இல்லாத அல்லது தலைமை இல்லாத என்பது பொருளாகும்.”[80] மனித சுதந்திரத்தை உறுதி செய்யும் விதமாக எந்த ஒரு மனிதனும் எந்த மற்றொரு மனிதனை அதிகாரத்தினாலோ, பயமுறுத்தலினாலோ ஆளமுடியாது என்பது இதன் குறிக்கோளாகும்.

### மிதவாதப் பெண்ணியம்

முதன்மைப் பெண்ணியம் என்றும் மிதவாதப் பெண்ணியம் என்றும் குறிக்கப்படும் இக்கருத்தாக்கம் பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றியது. மேற்கத்தியப் பெண்ணிய வரலாற்றில் மேரி உல்ஸ்டன் கிராப்ட் மிதவாதப் பெண்ணியக் கோட்பாட்டாளராகக் கருதப்படுகிறார். அவர் “1792 இல் எழுதிய மகளிர் உரிமைகள் கொள்கை சாசனம்(A vindication of the rights of women) என்ற நூல் மிதவாதப் பெண்ணிய ஆவணமாகத் திகழ்கிறது. வாழ்வின் எல்லாக் கட்டத்திலும் மகளிர்க்கு உரிமைகளும், வாய்ப்புகளும் சமமாகக் கிடைக்கத் தேவைப்படும் வாழ்வுரிமைகள்”[81] பற்றி மிக விரிவாக அந்நூலில் பதிவு செய்துள்ளார். 1869இல் ஜான் ஸ்டுவர்ட் மில் (John Stuart mill) எழுதிய

‘பெண்ணடிமைத்தனம்’ (The subjection of women) மிதவாதப் பெண்ணிய நூலாகும்.

தமிழ்ச் சூழலில் “பெண் விடுதலை, பெண் உரிமைகள், பெண் சமத்துவம் பற்றி விரிவாகச் சிந்தித்து கவிதைகளிலும், கட்டுரைகளிலும் எழுதிய மகாகவி பாரதி மிதவாதப் பெண்ணியவாதி”[82] ஆவார்.

### மார்க்சியப் பெண்ணியம்

நிலத்தைப் பொதுவாகக் கொள்வது போல் பொது உணவுக்கூடம் உருவாக்கி பெண்களைச் சமையல் வேலையிலிருந்து விடுவிக்க வேண்டும். “திருமண உறவால் ஆணையும் பெண்ணையும் பிணிக்கும் நிலைநீங்கி, தோழமையுடன் ஆண்-பெண் அடக்கு முறையின்றி மணம் புரிந்து வாழும் நிலை வேண்டும்”[83] என்று மார்க்சியப் பெண்ணியம் கருத்துக்களை முன் வைக்கிறது.

### சமதருமப் பெண்ணியம்

வர்க்கபேதம், பால் வேறுபாடு ஆகிய இரண்டையும் சமூகத்திலிருந்து அறவே ஒழிப்பதன் மூலம் எல்லாவிதச் சுரண்டல்களையும் நீக்க முடியும். “ஆண் மேலாதிக்கமோ, பெண் மேலாதிக்கமோ இல்லாத சமதரும சமூகத்தை உருவாக்க வேண்டும்”[84] என்று சமதர்மப் பெண்ணியம் முனைகிறது.

### தீவிரப் பெண்ணியம்

பெண்ணை மேம்படுத்தும் இலக்குடன் தீவிரமாகச் செயல்படும் பெண்ணிய வகைகள் பெண் முன்னேற்றத்தில் தம்மால் ஆன சிறந்த பங்களிப்பைத் தந்துள்ளன. “எல்லாவித அடக்கு முறைகளுக்கும் ஆணி வேராய்த் திகழ்வது

பெண் அடக்குமுறை என்றும் பெண் அடக்குமுறையை அகற்றிவிட்டால் பிறவெல்லாம் தாமே சீராகும்"[85] என்றும் தீவிரப் பெண்ணியம் கருதுகிறது. தந்தை பெரியாரின் 'பெண் ஏன் அடிமையானாள்' என்ற நூல், தமிழில் தீவிரப் பெண்ணிய கருத்துக்களை முன்வைக்கும் நூலாகும்.

ஆண், பெண் சமத்துவத்திற்கு முட்டுக்கட்டைகளாக இருக்கும் "கற்பு, கைம்மை, விபச்சாரம், சொத்துரிமையின்மை போன்ற கட்டுப்பாடுகளைக் களைத்தெறிந்துவிட்டு, மூடநம்பிக்கை எனும் இருளிலிருந்து வெளியேறி, பகுத்தறிவைத் துணையாகக் கொண்டு ஒரு தலைகீழ்ப் புரட்சியை ஏற்படுத்தப் பெண்ணுலகு முன்வர வேண்டும்"[86] என்பது பெரியாரின் தீவிரமான முடிவாகும்.

மாயூரம் முனிசீப் வேதநாயகம் பிள்ளை, "பெண்கல்வி (1869) பெண்மதிமாலை (1868) பெண்மானம் (1870)"[87] ஆகிய நூல்களை எழுதிப் பெண்களுக்குக் கல்வியளிப்பதன் அவசியத்தைப் பெரிதும் வலியுறுத்தினார்.

பெண் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவதே பெண்ணியத்தின் இலக்கு ஆகும். பெண் மேம்பாட்டிற்கு உழைக்கும் மனிதர் பெண்ணியவாதி ஆவார். பெண்ணியவாதி ஆணாக இருக்கலாம், பெண்ணாக இருக்கலாம். மகளிரை அணிசேர்த்து, ஒருங்கிணைந்த கூட்டுச் செயல்பாட்டின் மூலம் பெண்ணினத்தை மேம்படுத்துதல் பெண்ணியச் செயல்பாடு ஆகும்.

## இயல் சுருக்கம்

பெருமையும், வலிமையும் ஆணுக்குரிய பண்புகளாகவும், அச்சம், மடம், நாணம் ஆகியன பெண்ணுக்கு இருக்க வேண்டிய குணங்களாகும் என்றத் தொல்காப்பியரின் கருத்து விளக்கப்பட்டுள்ளன. ஆணும், பெண்ணும் மனித சமுதாயத்தின் இருசம பகுதிகள். சமுதாயத்தின் அடிப்படை அமைப்பான குடும்பத்தை அமைக்கவும், உருவாக்கவும் இருபெரும் சக்திகளாக ஆணும், பெண்ணும் உள்ளனர் என்று ஆராயப்பட்டுள்ளது.

அன்பு, தியாகம், தொண்டு, பொறுமை, அறிவு, அழகு ஆகியவை எல்லாம் அமையப் பெற்றவளே பெண் ஆவாள். தம் கணவரது வருவாயின் அளவை அறிதல், அதற்குத்தக்கவாறு செலவு செய்தல், சுற்றத்தினர் விரும்பும்படி விருந்தோம்பல், செல்வத்தைத் தருகின்ற தெய்வத்தை வழிபாடு செய்தல் ஆகியவை பெண்களுக்குச் சிறப்பினைத் தரும் என்று ஆராயப்பட்டுள்ளன.

வறுமையிலும் கடமையைச் செய்பவளாக வாழ்பவளே நல்ல மனைவி என்றும், கற்பு என்னும் உறுதிநிலை கொண்டப் பெண் பெருமை அடைவாள் என்றும் விளக்கப்பட்டுள்ளன. கற்பை ஆடையாகவும், அன்பை மலராகவும், நாணத்தைச் சந்தனமாகவும், நற்குண நற்செயல்களை ஆபரணங்களாகவும் அணிந்திருக்க வேண்டும். கற்பும், அன்பும், நாணமும் தாங்கியவளாக இருத்தல் ஆகியவையே நல்ல மனைவி என்று சிறப்பாகச் சொல்வதற்குரிய தகுதிகளாகும் என்று ஆராயப்பட்டுள்ளன.

அன்பும், அறிவும், நற்பண்பும், திறமையும் உள்ள பெண்களால் தான் குடும்பங்கள் சிறப்படையும். இல்வாழ்க்கைக்குத் தகுந்த நற்பண்பு மனைவியிடம்

இருந்தால் மட்டுமே வாழ்க்கை சிறப்படையும். பொருளாசை நீங்கி வாழ வேண்டும். அவ்வாறு பொருளாசை நீங்கி வாழ்பவரே உயர்ந்த நிலையை அடையமுடியும் என விளக்கப்பட்டுள்ளன.

ஆண் எது செய்தாலும் ஏன் என்று கேட்காமல் அடங்கி இருப்பது பெண்ணுக்கு அழகு என்று கூறுகின்றனர். ஆணுக்கு விட்டுக் கொடுப்பதைப் பற்றி அறிவுரை கூறாத அறநூல்கள் பெண் அடங்கி நடக்காமல் இருப்பது துன்பமானது எனும் அறிவுரை கூறும் நிலைப் பற்றி ஆராயப்பட்டுள்ளது.

மைதீட்டுவதும், மலர் சூடுவதும் மங்கலமாகக் கருதும் மனநிலை இன்றும் மகளிரிடம் காணப்படுகிறது. மை கண்ணுக்குக் குளிர்ச்சி தருவது. அதனாலேயே பலர் சிறிய குழந்தைக்கும் மையிட்டு அழகு பார்க்கின்றனர். ஆனால் அறநூலார் மையையும், மலரையும் குறைவுபடுத்திப் பேசியிருப்பதைக் காணமுடிகிறது. பெண்கள் மைதீட்டி, மலர்சூடக் கூடாது என்றத் தவறானக் கருத்தை அறநூல்கள் கூறுகின்றன என்பதைப் பற்றி ஆராயப்பட்டுள்ளன.

உயிரினும் சிறந்தது நாணம், அதனினும் சிறந்தது கற்பு. பெண்களுக்கு நாணம் முதலிய பெண்மைப் பண்புகள் இருப்பின் அவர்களுக்கு மற்ற நலன்களும் சிறக்கும் என விளக்கப்பட்டுள்ளது. பயறுகளுள் பத்தினிப் பயறாக இருப்பது எவ்வாறு வேகாமல் இருப்பது போல் கற்புடைய பெண்ணை நெருப்பாலும் அழிக்க முடியாது என ஆராயப்பட்டுள்ளன. கற்பு என்பது மழைபெய்விக்கும் ஆற்றல் பெற்றது. கற்புடைய பெண்கள் பெய் என்றால் மழைபெய்ய வேண்டும். வேறு தெய்வம் தொழாதவளாய்த் தன் கணவனையே தெய்வமாகக் கொண்டு தொழுது துயிலெழுகின்றவள் பெய் என்றால் மழை பெய்யும். மழை பெய்யச் செய்யும்

மாண்புடையவளே கற்புடைய பெண். கற்புடைய பெண்கள் கணவனைத் தவிரப் பிற கடவுள்களை வழிபடமாட்டார்கள் என்ற அறநூல்களின் கருத்தை ஆராயப்பட்டுள்ளன.

'உமனிசம்' என்ற சொல் பெண் உரிமைச் சிந்தனைகளையும், அதன் அடிப்படையிலான போராட்டங்களையும் குறிப்பதற்குப் பயன்பட்டது பற்றி விளக்கப்பட்டுள்ளன. பெண்ணியம் என்ற சொல்லுக்கு பெண்களின் தேவைகளை நிறைவேற்ற அவர்கள் சார்பாக வாதாடுவது போராடுவது என்றும், பெமினிசம் என்ற சொல்லுக்கு பெண்விடுதலை இயக்கங்கள், பெண்நிலைவாதம் என்றும் ஆராயப்பட்டுள்ளன.

## குறிப்புக்கள்

1. இளம்பூரணர் (உரை), தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், பா.95, ப.163.
2. மேலது, பா.96, ப.165.
3. முல்லை முத்தையா, நீதிநூல்கள், ஆத்திசூடி, பா.83, ப.23.
4. மேலது, கொன்றைவேந்தன், பா.66, ப.42.
5. மு.வரதராசனார், திருக்குறள், பா.56, ப.13.
6. மேலது, பா.58, ப.13.
7. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), நாலடியார், பா.384, ப.296.
8. ஆ.பொன்னுசாமிப்பிள்ளை,நீதிநூற்கொத்து(இரண்டாம்பாகம்), அறநெறிச்சாரம், பா.159, ப.83.
9. மேலது, பா.160, ப.84.
10. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை(இளவழகனார்), நீதிநூற்கொத்து(இரண்டாம் பாகம்), நீதிவெண்பா, பா.30, ப.30.
11. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா.151, ப.33.
12. துரை.இராசாராம், பதினெண்கீழ்க்கணக்கு (மூன்றாம்பகுதி), திரிகடுகம், பா.64, ப.35.
13. மேலது, சிறுபஞ்சமூலம், பா.43, ப.130.
14. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), நாலடியார், பா.289, ப.223.
15. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா.54, ப.13.
16. முல்லை முத்தையா, மு.கூ.நூ, வெற்றிவேற்கை, பா.22, ப.59.

17. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்),நீதிநூற்கொத்து(இரண்டாம் பாகம்), நீதிநெறிவிளக்கம், பா.81, ப.76.

18. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), நாலடியார், பா.361, ப.277.

19. கோ.இளையபெருமாள், புறநானூறு, பா.314, பா.வ:1,ப.232.

20. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை(இளவழகனார்), நாலடியார், பா.363, ப.278.

21. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா.52, ப.13.

22. முல்லை முத்தையா, மு.கூ.நூ,மூதுரை, பா.27, பா.வ:4, ப.85.

23. மேலது, கொன்றை வேந்தன், பா.42,பா.வ:4, ப.37.

24. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), நாலடியார், பா.365, ப.280.

25. வா.மகாதேவமுதலியார்,நானாற்பது,இனியவைநாற்பது,பா.37,பா.வ:3-4,ப.36.

26. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை(இளவழகனார்), மு.கூ.நூ,நீதிவெண்பா,பா.72,ப.60.

27. துரை.இராசாராம், மு.கூ.நூ, ஏலாதி, பா.15, ப.206

28. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்),மு.கூ.நூ,நீதிவெண்பா, பா.31,ப.31.

29. முல்லை முத்தையா, மு.கூ.நூ, ஆத்திசூடி, பா.62, ப.20.

30. மேலது, வெற்றிவேற்கை, பா.11, ப.58.

31. மேலது, கொன்றைவேந்தன், பா.5, ப.29.

32. துரை.இராசாராம், மு.கூ.நூ, திரிகடுகம், பா.71, பா.வ:2, ப.38.

33. மேலது, பா.53, ப.31.

34. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), நாலடியார், பா.354, ப.271.

35. முல்லை முத்தையா, மு.கூ.நூ, வெற்றிவேற்கை, பா.13, ப.58.

36. மேலது, மூதுரை, பா.3, ப.71.

37. ஆ.பொன்னுசாமிப்பிள்ளை, மு.கூ.நூ, பா.163, ப.85.

38. முல்லை முத்தையா, மு.கூ.நூ, கொன்றைவேந்தன், பா.78, ப.44.

39. மேலது, உலகநீதி, பா.12, ப.54.

40. இளம்பூரணர் (உரை), மு.கூ.நூ, களவியல், பா.111, ப.208.

41. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), நாலடியார் பா.386, ப.298.

42. துரை.இராசாராம், மு.கூ.நூ, திரிகடுகம், பா.52, பா.வ:1-2, ப.31.

43. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா.1011, ப.207.

44. ந.மு.வேங்கடசாமி நாட்டார்,நானாற்பது,இன்னாநாற்பது,பா.19,பா.வ:1-2, ப.21.

45. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), நாலடியார், பா.293, ப.226.

46. மேலது, பா.381, ப.293.

47. துரை.இராசாராம் ,மு.கூ.நூ,திரிகடுகம், பா.47, ப.28.

48. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா.57, ப.13.

49. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), நாலடியார், பா.362, ப.278.

50. முல்லை முத்தையா, மு.கூ.நூ, கொன்றை வேந்தன், பா.14, ப.31.

51. மேலது, பா.15, ப.31.

52. மேலது, வெற்றிவேற்கை, பா.12, ப.58.

53. ஆ.பொன்னுசாமிப்பிள்ளை, மு.கூ.நூ, பா.32, ப.22.

54. மேலது, பா.162, ப.85.

55. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா.55, ப.13.

56. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை(இளவழகனார்),கலித்தொகை,குறிஞ்சிக்கலி,பா.39, பா.வ:5-6, ப.109.

57. துரை.இராசாராம், மு.கூ.நூ, திரிகடுகம், பா.96, ப.48.

58. ந.மு.வேங்கடசாமி நாட்டார், சிலப்பதிகாரம், புகார்காண்டம், கனாத்திறமுரைத்த காதை, பா.வ:59-64, ப.246.

59. பொ.வே.சோமசுந்தரனார்,பத்துப்பாட்டு(இரண்டாம்பகுதி),பட்டினப்பாலை, பா.வ:39, ப.2.

60. ந.மு.வேங்கடசாமி நாட்டார், ஔவை சு.துரைசாமிப்பிள்ளை,மணிமேகலை, சிறைசெய்காதை, பா.வ:59-69, ப.308.

61. உ.வே.சாமிநாதையர், சீவகசிந்தாமணி,கனகமாலையாரிலம்பகம், பா.1598, ப.813.

62. நச்சினார்க்கினியர் (உரை),தொல்காப்பியம், சொல்லதிகாரம், ப.57.

63. திரு.வி.கா, பெண்ணின் பெருமை, ப.12.

64. இரா.பிரேமா, பெண்ணியம், ப.2.

65. செ.சாரதாம்பாள், பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும், ப.3.

66. மேலது, ப.2.

67. மேலது, ப.2.

68. இரா.ரெங்கம்மாள், சி.வாசுகி, பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும், ப.9.

69. இரா.பிரேமா, மு.கூ.நூ, ப.89.

70. மேலது, ப.11.

71. மேலது, ப.13.

72. மேலது, ப.14.

73. மேலது, ப.14.

74. மனிதநேயன், பாரதியின் முழக்கம், ப.8.

75. கதிர் மகாதேவன், பெண்ணியம், ப.8.

76. ஆனந்தவல்லி மகாதேவன், ஜெயகோதைப்பிள்ளை, பெண்ணியல், ப.32.

77. இரா.பிரேமா, பெண்ணியம் அணுகுமுறைகள், ப.18.

78. இரா.பிரேமா, மு.கூ.நூ, ப.14.

79. மேலது, ப.92.

80. மேலது, ப.96.

81. ஆனந்தவல்லி மகாதேவன், ஜெயகோதைப்பிள்ளை, மு.கூ.நூ, ப.34.

82. மேலது, ப.35.

83. மேலது, ப.35.

84. மேலது, ப.36.

85. மேலது, ப.36.

86. மேலது, ப.41.

87. மேலது, ப.40.